# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் நடப்பட்டு வரும் மரகன்றுகளால் ஊராட்சிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கபெறும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் தகவல்

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாற்றாங்கால் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.08.2016) செய்தியாளர் சுற்றுப் பயணத்தின் போது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த செய்தியாளர் சுற்றுப் பயணத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நாற்றாங்கால் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு பொது மக்கள் பயன்பெறும் வகையில் ஊராட்சிகளில் காடுகளின் பரப்பளவை அதிகரித்து ஊராட்சிகளுக்கு அதிக வருமானத்தை பெருக்கும் வகையில் அதிகஅளவு மரக்கன்றுகள் நட்டு வளர்க்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் இருந்திராப்பட்டி ஊராட்சி, இருந்திராப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.21.80 லட்சம் மதிப்பீட்டில் நடவு செய்யப்பட்டுள்ள 105500 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் (இலக்கு 1 லட்சம் மரக்கன்றுகள்) மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், துவார் ஊராட்சி, துவார் கல்லுப்பட்டியில் ரூ.24.38 லட்சம் மதிப்பீட்டில் நடவுசெய்யப்பட்டுள்ள 87730 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் (இலக்கு 1 லட்சம் மரக்கன்றுகள்) ஆகிய நாற்றங்கால் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் இருந்திராப்பட்டியில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளில் கருவேல் 60000 கருவேல் மரக்கன்றுகள், 3000 பலா மரக்கன்றுகள், 20000 புளியம் மரக்கன்றுகள், 7000 புங்கன் மரக்கன்றுகள், 3000 வேம்பு மரக்கன்றுகள், 2000 நாவல் மரக்கன்றுகள், 5000 பூவரசு மரக்கன்றுகள், 2000 மலைவேம்பு மரக்கன்றுகள், 1000 தேக்கு மரக்கன்றுகள், 2500 இலுப்பை மரக்கன்றுகள் என மொத்தம் 105500 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடவுசெய்யப்பட்டுள்ளது. இதில் குருங்குளத்தில் 5000 கருவேல் மரக்கன்றுகள் நடவுசெய்யும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் இருந்திராப்பட்டி ஊராட்சி, இருந்திராப்பட்டியில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.08.2016) செய்தியாளர் சுற்றுப் பயணத்தின் போது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், துவார் கல்லுப்பட்டியில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளில் 1000 மகாகனி மரக்கன்றுகள், 13000 புளியம் மரக்கன்றுகள், 2000 புங்கன் மரக்கன்றுகள், 7000 பலா மரக்கன்றுகள், 50 பதாம் மரக்கன்றுகள், 50 எலுமிச்சை மரக்கன்றுகள், 10200 வேம்பு மரக்கன்றுகள், 3600 பூவரசு மரக்கன்றுகள், 9500 தேக்கு மரக்கன்றுகள், 500 நவால் மரக்கன்றுகள், 330 மாங்கன்றுகள், 10000 கருவேல் மரக்கன்றுகள், என மொத்தம் 57230 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் ஊராட்சிகளில் உள்ள சாலையோரங்கள், கண்மாய்கள், குளங்கள் போன்ற பல்வேறு இடங்களில் நடப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்யப்படவுள்ளது. இம்மரக்கன்றுகள் ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ஊராட்சிகளில் காடுகளின் பரப்பளவு அதிகரிப்பதுடன் அதிக மழைப் பொழிவு ஏற்படும். மேலும் இம்மரக்கன்றுகள் வளர்ந்தவுடன் பொது மக்களுக்கு பயன் தருவதுடன் ஊராட்சிகளுக்கும் வருடம் முழுவதும் அதிக வருமானத்தை பெற்றுதரும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த செய்தியாளர் சுற்றுபயணத்தின் போது திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.இளவரசிவசந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. து.பாஸ்கர்,

திரு.கருப்பையா, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**